# ஸ்ரீ ஆசார்யாளின் யாத்திரை

நமது ஸ்ரீ ஆசார்யாளும், ஸ்ரீ புதுப்பெரியவாள், ஸ்ரீ நவநவ ஸ்வாமிகளும் சாதுர்மாஸ்ய வ்ரதத்தை கர்நூலில் அநுஷ்டித்த பிறகு, பாத யாத்திரையாக கிளம்பி கர்நூல்ஜில்லாவில் உள்ள பண்யம் நகர் வந்தடைந்தனர். பிறகு அங்கிருந்து கிளம்பி 1983ஆு டிஸம்பர் 31ஆம் தேதி அன்று கடப்பா ஜில்லாவிலுள்ள லக்கிரெட்டிபள்ளி கிராமத்தில் முகாமிட்டிருந்தார்கள். பெருவாரியான பக்தகோடிகள் மூன்று ஆசார்யாளையும் 1984 ஆம் ஆண்டு புதுவருஷத்திலும் தரிசித்து ஆசி பெற்றனர்.

இங்கிருந்து கிளம்பி ராயசோடிக்கு ஜனவரி 2ஆம் தேதி வந்தனர். அங்கே அவர்களுக்கு பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு ராயசோடியிலிருந்து கிளம்பி பிலேறு என்கிற ஊருக்கு வந்தார்கள். இது சித்தூர் ஜில்லாவில் உள்ளது. வழிநெடுகிலும் ஆந்திர மாநில மக்கள் பக்திப்பரவசத்துடன் மூன்று ஆசார்யாளையும் தரிசித்து பேறு பெற்றனர்.